**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 20.08.2026**
**OS. No. 56/2020**
**வழக்கு சாட்சி PW1–ராஜீ (எ) அண்ணாமலை, த/பெ.ஆறுமுகம்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) 1வது அயிட்ட சொத்திற்கு நான்தான் உரிமையாளர் என்றும், 2வது அயிட்ட சொத்தில் நான்தான் அனுபவத்தில் உள்ளேன் என்றும், 2வது அயிட்ட சொத்தில் யாரும் எனக்கு இடையூறு செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1வது பிரதிவாதி அருணாச்சலம் எனது பெரியப்பா மகன் ஆவார். எனது தாத்தா பெயர் அண்ணாமலை ஆகும். அவர்களுக்கு மன்னாதன், ஆறுமுகம், பச்சியம்மாள், செம்பாயம்மாள் ஆகிய பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் அனைவரும் விருதாசலம்பட்டி கூத்தனூரில் குடியுள்ளார்கள். பச்சியம்மாள், செம்பாயம்மாள் ஆகியோர்கள் பற்றி நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) 1973ல் மன்னாதன், ஆறுமுகம், பச்சியம்மாள் ஆகியோர்கள் பாகபிரிவினை செய்து கொண்டார்கள். மேற்படி பாகவிரிவினை பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகலை தாக்கல் செய்துள்ளேன். அசல் பத்திரம் தாக்கல் செய்யாததற்கு குறிட்ப்பிட்ட காரணம் உண்டா என்றால், அசல் பத்திரம் யாரிடம் உள்ளது என்று தெரியாததால் நகலை எடுத்து தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பாகபிரிவினை பத்திரங்கள் ஒரு பத்திரமா அல்லது இரண்டு பத்திரங்களாக எழுதப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. அது இரண்டு பத்திரங்களாக எழுதப்பட்டிருந்தால் எனது தந்தைக்கு ஒரு பத்திரம் வழங்கப்பட்ருக்கும் என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் சொத்துக்கள் 12 அயிட்டங்களாக காண்பிக்கப்பட்டுள்ளது. யார் யாருக்கு எந்தெந்த அயிட்ட சொத்துக்கள் வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட பாகபிரிவினையில் என் தந்தைக்கு வழங்கப்பட்ட சொத்தை நான்

மைனராக இருந்ததால் என் தாயாரை பாதுகாவலராக வைத்து எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்டது என்றால் சரிதான்.

3) மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகல் தாக்கல் செய்துள்ளேன். அசல் பத்திரத்தை தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் அசல் பத்திரம் என்னிடமில்லை, யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை, அதனால் நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பாகபிரிவினை மற்றும் தானசெட்டில்மெண்ட் பத்திரத்திதன் அசல் நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். ஏன் அசல் பத்திரம் ஒப்படைக்கவில்லை என்று வழக்கில் காரணம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்கண்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்தை என் தாயார் எனக்கு 1978 க்கு பிறகுதான் ஒப்படைத்தார்கள், அந்த சமயத்தில் என் வயது என்னவென்று எனக்கு குறிப்பாக தெரியவில்லை, தற்போது எனக்கு வயது சுமார் 60 இருக்கும்.

4) என்னிடம் என் தாயார் சொத்து ஒப்படைத்தபோது எனக்கு சுமார் 12 வயதிருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை. என் தாயார் எனக்கு சொத்து கொடுத்த போது அசல் செட்டில்மெண்ட் பத்திரத்தை பற்றி கேட்டேனா என்றால் கேட்கவில்லை. 14.05.1978 ல் தாவா சொத்தின் ஒரு பகுதியை என் தாயார் பிரதிவாதிகளின் தாயாருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பொய்யாக கிரயம் பெற்றுள்ளார்கள், அந்த பத்திரத்தை பொறுத்து பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் அதனால் தான் நான் தான் உரிமையாளர் என்று பரிகாரம் கேட்டுள்ளேன். அந்த பத்திரத்தை ரத்து செய்வதற்கும் பரிகாரம் கேட்டுள்ளேன்.

5) மேற்படி 14.05.1978 தேதிய பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். என்ன காரணத்திற்காக சொத்து விற்கப்பட்டது என்று அந்த பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை, அந்த பத்திரம் பொய்யானதாகும். மேற்கண்ட பத்திரத்தில் என் தந்தை ரூ.3 ஆயிரம் பெற்றுக்கொண்டு

புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ளதால் அந்த கடனை அடைப்பதற்காகவும், குடும்ப செலவிற்காகவும் சேர்த்துதான் விற்றதாகவும், பாகபிரிவினை பத்திரம் வாங்குவதற்கு முத்திரை தாள்களை குறைவாக கொடுத்ததாகவும் அவை அனைத்திற்கும் சேர்த்து விற்றதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியவில்லை.

6) நான் மேஜரான பிறகு என் தாயார் தாவா சொத்தின் சுவாதீனத்தை என்னிடம் ஒப்படைத்தாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் மைனராக இருக்கும்போதே தாவா சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதிகளின் தந்தை மன்னாதனிடமே ஒப்படைத்து விட்டு நானும், என் தாயாரும் தானப்பட்டியிலுள்ள என் பாட்டியின் வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றால் சரியல்ல. அதன்பிறகு 47 வருடங்களாக தாவா சொத்தை பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் மேஜரானது எந்த வருடம் என்றால் சுமார் 1991ற்கு மேல் ஆகும்.

7) நான் 1988 லேயே மேஜராகிவிட்டேன் என்றால் சரியல்ல. அதன்பிறகு நான் வழக்கு 1991 லேயே தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், அதனால் வழக்கு காலவரம்பு சட்டத்தால் பாதிக்புக்குள்ளாகிறது என்றால் சரியல்ல. நான் மேஜராகி 33 வருடங்களுக்கு பிறகு வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல, சொத்தில் நான்தான் அனுபவத்தில் உள்ளேன். 33 வருடங்களுக்கு பிறகு தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்பது சட்டப்படி சரியானது இல்லை என்றால் சரியல்ல.

8) 14.05.1978 தேதிய கிரயப்பத்திரம் பொய்யான ஆவணம் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா 1வது அயிட்ட சொத்தில் நான் எப்போதுமே சுவாதீனத்தில் இருக்கிறேன் என்றால் சரியல்ல, அந்த சொத்தின் உரிமையாளர் நான்தான், அதில் அவரை மற்றும் நிலக்கடலை பயிரிட்டுள்ளேன். அவ்வாறு நான் பயிர் செய்து வருவதற்கு அடங்கல் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மைகளை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) நான் மைனராக இருக்கும் போதே என் தாயார் மறு திருமணம் செய்துகொண்டு தானம்பட்டிக்கு சென்றுவிட்டார் என்றால் இல்லை. நான் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது 14.05.1978 தேதிய கிரயப்பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல, அப்போதே கேட்டுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்த பின்னிட்டு அவ்வாறு பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிபதான், 2023 ல் தான் அந்த பத்திரம் குறித்து எனக்கு தெரிய வந்தது. என் தாயார் 2020 ல் இறந்துவிட்டார், தேதி குறிப்பாக தெரியுமா என்றால் தெரியவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது என் தாயார் உயிருடன்தான் இருந்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கை நான் 23.06.2020 ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

10) என் தாயார் 30.07.2020 ல் இறந்துவிட்டார் என்றால் தேதி சரியாக தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் என் தாயாரின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். அந்த இறப்பு சான்றிதழ் கணிணி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் தாயார் வழக்கு தாக்கல் செய்யும்போது உயிருடன்தான் இருந்தார் என்றும், அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்திருந்தால் என் தாயார் கிரயம் செய்தது உண்மை என்று தெரிந்துவிடும் என்பதற்காக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, அவர் கிரயம் செய்து கொடுத்தது எனக்கு தெரியாது. என் தாயாருடன் நானும் தானம்பட்டிக்கு சென்றுவிட்டேன் என்றும், என் தந்தையை பிரதிவாதிகளின் தந்தையான மன்னாதன்தான் பார்த்து வந்தார் என்றால் சரியல்ல, தாவா சொத்திற்கு அருகில்தான் நாங்கள் வசித்து வந்தோம்.

11) நானும், என் தாயாரும் என் தந்தை இறப்பிற்கு கூட கலந்துகொள்ளவில்லை என்றும், பிரதிவாதிகளின் தந்தை மன்னாதன்தான் அதை அனைத்தையும் பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. 50 வருடங்களுக்கு மேல் மன்னாதனும் அவரது பிள்ளைகளும்தான் என் தந்தையை பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. 30 வருடங்களுக்குமேல் அதே ஊரில் இருந்தும் வழக்கு ஏன் தாக்கல் செய்யாமல் இருந்தேன் என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்தபிறகு தான் மற்ற விவரங்கள் தெரியவந்தது. தாவா சொத்துக்கள் அனைத்தும் பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றும், சொத்துக்கள் எங்கு உள்ளதே என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

( குறுக்கு விசாரணைக்காக வழக்கு 07.09.2026 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.